**<u>இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரிட்சை - 2025 (2026)</u>**
**<u>பரீட்சை நடைபெற்ற திகதி – 29.03.2026</u>**

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு தோற்றி, ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து, மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமையின் அடிப்படையில் பிரதேச செயலகப் பிரிவுகளின்படி தனித்தனியாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளில், வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இருமடங்கு விண்ணப்பதாரிகளை உள்ளடக்கி, பரீட்சை இலக்க ஒழுங்கில் தயாரிக்கப்பட்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பட்டியல் (அட்டவணை **01**, பக்க இலக்கம் **01 - 122** வரை) இதனூடாக வெளியிடப்படுகிறது மேலும், பின்வரும் விடயங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன:

1. பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருப்பது புள்ளிகள் அற்ற பெயர் பட்டியல் மாத்திரமேயாகும் என்பதோடு எந்தவொரு விண்ணப்பதாரியினதும் புள்ளிகள் வெளியிடப்படவில்லை.
2. ஒரு விண்ணப்பதாரியின் பெயர் இந்தப் பட்டியலில் உள்ளடங்குவதோ அல்லது ஒரு விண்ணப்பதாரி கட்டமைக்கப்பட்ட தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோ, அவர்கள் இப்பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு தகுதிகளைப் பூர்த்தி செய்வதாகக் கருதப்பட மாட்டாது.

இந்த பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

டப்.பீ.சீ.ஏ.வீரசூரிய
மேலதிகச் செயலாளர்
(உள்நாட்டு அலுவல்கள்) (க.ப)

ஒப்பம்-எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2026.08.19